FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318704

1. District : Coimbatore PS: VCAC Year: 2025 FIR No.: 20/2025/AECCB. Date: 06.10.2025
மாவட்டம் காவல்நிலையம் Coimbatore ஆண்டு மு.த.அ. எண் நாள் at 1300 hrs.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.09.2025 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 0715 hrs and 0730 hrs. Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 02.10.2025 Time : 1600 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 03.10.2025 Time : 1600 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Tamil typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North west, about 17km & 26km.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : 1. Sembukarai (Mangarai) Forest Checkpost Anaikatty Road, Mangarai, Coimbatore.
முறைக் காவல் எண் முகவரி 2. Anaikatty Forest Checkpost, Anaikatty, Coimbatore.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : E. Krishnamoorthy (b) Father's/ Husband's Name : Eswaran,
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 26/2025 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Farmer. (g) Address : Door no: 255F, Ramanna thottam, Kurumbapalayam, Madukkarai, Coimbatore.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. Selvakumar, Forest Guard, Sembukarai (Mangarai) forest checkpost, Anaikatty Road, Mangarai, Coimbatore.
2. Tr. Subramanian, Forest guard, Anaikatty forest checkpost, Periya Naickenpalayam range, Anaikatty, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
by the complainant.

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.10.2025 at 1700hrs.

Name: பெயர் ...T. Prabudass
Rank: நிலை ...Inspector of police,
VCity, Coimbatore.

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.20/2025/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.8318704-ன் தொடர்ச்சி.

03.10.2025-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 16.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் J.பிரபுதாஸ் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை குரும்பபாளையம், ராமண்ணா தோட்டம் திரு.ஈஸ்வரன் மகன் திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர் கோவை ஊ.த.க அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்துப் பார்த்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் ஈ. கிருஷ்ணமூர்த்தி (36), த/பெ.ஈஸ்வரன், கதவு எண்.255/F, ராமண்ணதோட்டம், குரும்பபாளையம், மதுக்கரை, கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புதுறை, கோவை. அய்யா, நான் கடந்த 3 வருடங்களாக கோவை, மதுக்கரை, குரும்பபாளையம், ராமண்ணதோட்டம், கதவு எண்.255/F என்ற முகவரியில் உள்ள வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் எனது அப்பா, எனது அண்ணன் திரு.சக்திவேல் ஆகியோருடன் சேர்ந்து கடந்த 2004-ம் வருடம் முதல் கேரளா மாநிலம், அட்டபாடி புதூரில் உள்ள எங்களுக்கு சொந்தமான 12 ஏக்கர் தோட்டத்தில் தென்னை, பாக்கு விவசாயம் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தொழில் செய்து வருகிறோம். பட்டுப்புழு வளர்ப்பிற்கு தேவையான மல்பெரி இலைகளை அங்கேயே பயிர்செய்து பயன்படுத்தி வருகிறோம். மல்பெரி இலைகள் நன்றாக வளரத் தேவையான தொழுஉரமான கோழிஎருவை பல்லடம், தாராபுரம் பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளில் சேகரித்து அங்கிருந்து அவ்வப்போது தேவைக்கேற்ப என்னுடைய நண்பர் திரு.பிரசாந்த் என்பவருக்கு சொந்தமான TN 37 ET 1480 என்ற பதிவெண் கொண்ட பாரத் பென்ஸ் என்ற லாரியின் மூலம் கோவை மாங்கரை மற்றும் ஆனைகட்டி சோதனைச்சாவடிகள் வழியாக

அட்டப்பாடி புதூரில் உள்ள எங்கள் தோட்டத்திற்கு எடுத்து செல்வோம். என்னுடைய நண்பர் திரு.பிரசாத் என்பவர் மேற்படி கோழி எருவை என்னுடைய தோட்டத்திற்கு கொண்டுவரும் வழியில் கோவை ஆனைகட்டி சாலையில் உள்ள கோவை வனசரகத்தை சேர்ந்த செம்புக்கரை (மாங்கரை) வனத்துறை சோதனைச்சாவடி மற்றும் பெரியநாயக்கன்பாளையம் வனசரகத்தை சேர்ந்த ஆனைகட்டி வனத்துறை சோதனைச்சாவடி வழியாக கொண்டு வரும்போது அங்கிருக்கும் பாரஸ்ட் கார்டுகள் கோழி எருவு கொண்டு செல்வதற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு அலுவலகத்தில் இருந்து அனுமதி பெறவேண்டும் எனவும், இல்லை என்றால் இரண்டு சோதனைச்சாவடிகளிலும் லஞ்சமாக தலா ரூ.1,000/- கேட்டுப் பெறுவதாக என்னிடம் சொன்னார். நான் இது சம்பந்தமாக கோயம்புத்தூர், குறிச்சி, பொள்ளாச்சி மெயின்ரோடு, சிட்கோ தொழிற்பேட்டை அருகில் உள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு அலுவலகத்தில் இருந்த உயர் அதிகாரி ஒருவரை நேரில் சந்தித்து கோழி எருவு கொண்டு செல்வதற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு அலுவலகத்தில் இருந்து அனுமதி சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் கோழி எருவு கொண்டு செல்ல தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு அலுவலகத்தில் இருந்து அனுமதி எதுவும் வாங்க தேவையில்லை என்று என்னிடம் தெரிவித்தார். எனவே, நானும் கடந்த 27.09.2025-ம் தேதி சனிக்கிழமை பல்லடத்தில் உள்ள நிறையூர் கோழிப்பண்ணையில் இருந்து என்னுடைய நண்பர் திரு.பிரசாந்த் என்பவருக்கு சொந்தமான TN 37 ET 1480 என்ற பதிவெண் கொண்ட பாரத் பென்ஸ் லாரியில் கோழி எருவை ஏற்றிக்கொண்டு அதிகாலை சுமார் 05.00 மணிக்கு பல்லடத்தில் இருந்து கிளம்பி அட்டப்பாடி புதூர் நோக்கி நண்பர் திரு.பிரசாந்த் லாரி ஓட்ட நானும் அவர்கள் உடன் சென்றேன். அப்போது கோவை ஆனைகட்டி சாலையில் உள்ள செம்புக்கரை (மாங்கரை) வனத்துறை சோதனைச் சாவடிக்கு காலை சுமார் 07.15 மணிக்கு சென்று லாரியை நிறுத்திவிட்டு சோதனை சாவடிக்கு முன்புறமாக மேசையில் அமர்ந்திருந்த பாரஸ்ட் கார்டு திரு.செல்வகுமாரிடம் கோழி எருவு கொண்டு செல்வதாக நான் சொன்னபோது அவர், ஏற்கெனவே கோழி எருவு

கொண்டு சென்று பெரிய பிரச்சினை ஆகிவிட்டது என்று சொன்னார். நான் சார் என்ன செய்வது விவசாயத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டதற்கு, அவர் சரி பைசா கொடுத்துவிட்டு செல்லுங்கள், நான் சொல்லிவிடுகிறேன் என்று சொன்னார். நான் தயங்கிய போது, வண்டியை அனுப்பக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள் என்று சொல்லி அவர் என்னிடம் ரூ.1,000/- கேட்டார். நான் என்ன சார் ரூ.1,000/- கேட்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் இப்போதெல்லாம் அப்படிதான் போயிட்டு இருக்கு, அனுப்ப கூடாதுனு சொல்லி பெரிய பிரச்சனை ஆகிடுச்சு, என்று சொல்லி சரி ரூ.500/- ஆவது கொடுத்து விட்டு போங்க என்று சொல்லிவிட்டு அதுக்கு மேல நான் என்ன பண்றது இப்போலாம் அப்படிதான் போகுது என்று மிரட்டலாக சொன்னார். நான் இந்த வாரத்தில் மறுபடியும் லோடு கொண்டு வரவேண்டும் என்று சொன்னபோது, அதற்கு அவர் போன் நம்பர் கொடுக்கிறேன் என்றும் வரும்போது கால் செய்துவிட்டு வரசொன்னார். அவர் 9715014604 என்ற அவர் போன் நம்பரை எனக்கு கொடுத்தார். அதன் பின்பு நான் லாரிக்கு சென்று எனது நண்பர் பிரசாத்திடம் பாரஸ்ட் கார்டு ரூ.1000/- கேட்கிறார், குறைந்தது ரூ.500/-ஆவது கொடுக்க வேண்டும் என்று சொன்னதாக சொன்னேன். நானும் பாரஸ்ட் கார்டு திரு.செல்வகுமார் கேட்ட பணம் ரூ.1,000/-ஐ கொடுக்கவில்லை என்றால் லாரியை அட்டப்பாடி புதூர்க்கு தொடர்ந்து விடமாட்டார்கள் என்ற பயத்தில் திரு.செல்வகுமார் கேட்ட பணம் ரூ.1,000/-ஐ அவரிடம் கொடுத்துவிட்டு மீண்டும் லாரியில் புறப்பட்டு அட்டப்பாடி புதூர் நோக்கி சென்றோம். அப்போது காலை சுமார் 07.30 மணிக்கு ஆனைகட்டியில் உள்ள தமிழ்நாடு வனத்துறை சோதனை சாவடிக்கு சென்று லாரியை சோதனைச்சாவடிக்கு முன்பாக நிறுத்திவிட்டு சோதனை சாவடிக்கு சென்று அங்கு சீருடையில் பணியில் இருந்த பாரஸ்ட் கார்டு திரு.சுப்ரமணியன் என்பவரிடம் லாரியில் கோழி எருவு ஏற்றிக்கொண்டு அட்டப்பாடி புதூர் செல்வதாக தெரிவித்தபோது அவர் என்னை சோதனைச்சாவடிக்கு உள்ளே அழைத்துச் சென்று 1,000/- ரூபாய் கொடுக்க சொன்னார். நான் அவரிடம் என்னங்க சார் ரூபாய் 1,000/- கேக்குறீங்க என்று கேட்டபோது அவர் கோழி எருவுக்கு ரெகுலரா வாங்குறது ரூ.1,000/-ம் தான்

என்று சொன்னார். நானும் வேறுவழி இல்லாமல் ரூ.1,000/-ஐ அவரிடம் கொடுத்தேன். அவர் பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்து விட்டு அவரது சீருடை பேன்ட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். நான் அவரிடம் சார் அடுத்த முறையாவது பணம் கம்மி பண்ணுங்க என்று கேட்டதற்கு கோழி எருவு லோடு அனுமதிக்க இனிமேல் ரெகுலரா ரூபாய் ஆயிரம் தான் கொடுக்க வேண்டும் என்றும், அவர்கள் மூன்று பாரஸ்ட் கார்டுகள் சுழற்சி முறையில் பணி செய்வதாகவும், யார் பணியில் இருந்தாலும் ரூபாய் ஆயிரம் தான் ரெகுலராக வாங்குவார்கள் என்றும் தெரிவித்தார். என் வாழ்வாதாரம் இயற்கை விவசாயத்தை நம்பி இருக்கிறது. இயற்கை உரமான கோழி எருவை என்னுடைய இடத்திற்கு எடுத்து செல்ல லஞ்சமாக பணம் கேட்கும் இரண்டு வனத்துறை சோதனைச்சாவடியில் உள்ள பாரஸ்ட் கார்டுகளுக்கு தலா ரூ.1,000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே நான் மீண்டும் 07.10.2025-ம் தேதி கோழி எருவு உரம் கொண்டு செல்லும்போது என்னிடம் லஞ்சம் கேட்கும் பாரஸ்ட் கார்டுகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால் உடனே லஞ்ச ஒழிப்புதுறை வந்து புகார் கொடுக்க இயலவில்லை. மேலும் இத்துடன் 27.09.2025-ம் தேதி காலை சுமார் 07.15 மணிக்கு செம்புக்கரை (மாங்கரை) சோதனைச்சாவடியில் பாரஸ்ட் கார்டு திரு.செல்வகுமார் அவர்களும், அன்றே காலை சுமார் 07.30 மணிக்கு ஆனைகட்டி சோதனைச்சாவடியில் பாரஸ்ட் கார்டு திரு.சுப்ரமணியன் அவர்களும் என்னிடமிருந்து லஞ்சமாக தலா ரூ.1,000/- கேட்டுப் பெற்றுக்கொண்ட விபரங்கள் அடங்கிய நிகழ்வுகளை வீடியோவாக எனது செல்போனில் பதிவு செய்துவைத்திருந்தேன். அதை DVD-ல் பதிவிறக்கம் செய்து எனது புகாருடன் இணைத்துள்ளேன். நாள்: 03.10.2025 இடம்: கோவை இப்படிக்கு sd.XXXXX 03.10.2025 (Krishnamoorthy.E). மேற்படி வாதி ஆஜர் செய்த DVD- உரையாடல்களை கேட்டும், கவனித்தும் அதன் பதிவுகளை மீண்டும் கணினியில் காவல் ஆய்வாளர் அவர்களால் விசாரணைக்காக பதிவிறக்கம் செய்தும், வாதியிடம் இருந்து 63(4)(c) of B.S.A 2023 சான்று கேட்டுப்

பெறப்பட்டது. மேற்படி புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் - ஆனைகட்டி சாலையில் உள்ள செம்புக்கரை (மாங்கரை) தமிழ்நாடு வனத்துறை சோதனைச்சாவடியில் பணிபுரியும் வன காவலர் திரு.செல்வகுமார் மற்றும் ஆனைகட்டி தமிழ்நாடு வனத்துறை சோதனைச்சாவடியில் பணிபுரியும் வன காவலர் திரு.சுப்ரமணியன் ஆகிய இருவரும் லஞ்சப்பணம் கேட்டுப் பெற்றுக்கொண்டதும், அதே போல் எதிர்வரும் நாட்களில் கோழி எருவு ஏற்றிக்கொண்டு செல்லும் லாரிக்காரர்களிடமும் மேற்படி சோதனைச்சாவடிகளில் அப்போது பணியில் இருக்கும் வனக்காவலர்களும் தலா ரூ.1,000/- பெற்றுக்கொண்டுதான் லாரியை சோதனைச்சாவடியை கடந்து செல்ல அனுமதிப்பார்கள் என்றும் தெரிகிறது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. எனவே, எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 06.10.2025-ம் தேதி 13.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.20/2025/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரிகள் திரு.செல்வகுமார், வன காவலர், தமிழ்நாடு வன சோதனைச்சாவடி, செம்புக்கரை (மாங்கரை) மற்றும் திரு.சுப்பரமணியன், வன காவலர், தமிழ்நாடு வன சோதனைச்சாவடி, ஆனைகட்டி ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Madam, Received the above complaint on 03.10.2025 at 16.00 hrs. sd.XXXXX, (J.PRABUDASS) 03/10/2025, Insp., V&AC, Cbe. Madam, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.20/2025/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered

by me on 06.10.2025 at about 13.00 hrs sd.XXXXX, (J.PRABUDASS) 06/10/2025, Inspector of Police, V&AC, Coimbatore. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு மற்றும் அவரது 63(4)(C) of B.S.A 2023 சான்று மற்றும் File Hash Value report with certificate 63(4)(C) of B.S.A 2023 ஆகியவற்றுடன் கூடிய DVD ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

06/10/25

(J.பிரபுதாஸ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.